DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| CC.NO. 35/19 | Crime No.:56/19 | Police Station : BHAVANI |
| PW : 6 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | பாலமுருகன் | Caste | |
| Father Name | வெங்கிடுசாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 40 |

| | |
|---|---|
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | 11.04.2022 |

**முதல் விசாரணை**-

நான் கூனக்காபாளையத்தில் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். என்ன நடந்தது என்று எனக்குதெரியாது. சம்பவ இடத்திற்கு போலீசார் வந்திருந்தனர். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**சாட்சி கு.வி.மு.ச.பிரிவு 161-ன் கீழான வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால், பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை** -

கடந்த 07.02.19 அன்று 04.30 மணிக்கு அ.சா.1 ன் மோட்டார் ரூமில் வைத்து, எதிரிகள் இருவரும் அ.சா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டி, அவரை அடித்ததாகவும், பின் வலதுபக்க உதட்டில் குத்தி இரத்த காயத்தை ஏற்படுத்தியதாகவும், அங்கிருந்த அ.சா.1 ன் மனைவி அய்யம்மாள் சத்தம்போட, எதிரி மோகன் கீழே கிடந்த ஒரு கல்லை எடுத்து காட்டியும், எதிரி சிவக்குமார் தான் கையில் வைத்திருந்த கட்டிங்பிளேயரை காட்டியும், அ.சா.1 யை பார்த்து நீங்கள் இந்த இடத்தை காலி செய்யாவிட்டால் நாங்கள் உங்களை கொன்றுவிடுவோம் என கொலை மிரட்டல் விடுத்ததாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு ஆதாயத்திற்காக, எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**-இல்லை.

**மறுவிசாரணை**- இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| CC.NO. 35/19 | Crime No.:56/19 | Police Station : BHAVANI |
| PW : 7 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | மூர்த்தி | Caste | |
| Father Name | தங்கவேல் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 42 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | | | 11.04.2022 |

**முதல் விசாரணை**-

நான் கூனக்காபாளையத்தில் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம், தேதி, மாதம் நினைமவில்லை. சம்பவ இடத்திற்கு போலீசார் வந்து, விசாரணை செய்து, மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தனர். சாட்சியாக இருக்கும்படி கேட்டதால் நானும் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினமே இரவு 08.00 மணியளவில் போலீசார் சம்பவ இடத்திலிருந்து ஒயர், கட்டிங்பிளேடு ஒன்று ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினர். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**-

பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் என்ன எழுதபட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒயர், கட்டிங்பிளேடை போலீசார் கா.நிலையம் வரவழைத்து என்னிடம் காட்டி, கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் பெற்று கொண்டனர் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் நான் மொத்தம் 2 தாள்களில் 2 கையொப்பம் செய்தேன்.

**மறுவிசாரணை**- இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| CC.NO. 35/19 | Crime No.:56/19 | Police Station : BHAVANI |
|---|---|---|
| PW : 8 | C.MP. | DVC : |

| Name | முத்துசாமி | Caste | |
|---|---|---|---|
| Father Name | குப்புசாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 51 |

| | |
|---|---|
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | 11.04.2022 |

**முதல் விசாரணை-**

நான் கூனக்காபாளையத்தில் குடியிருந்துகொண்டு பர்னிச்சர் கடை வைத்துள்ளேன். கடந்த 07.02.2019 ம் தேதி, மாலை சுமார் 04.30 மணிக்கு அ.சா.1 யை எதிரிகள் இருவரும் அடித்துவிட்டதாக தகவல் கிடைத்து, சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, அ.சா.1 மருத்துவமனைக்கு சென்றிருந்தார். எதிரிகள் அ.சா.1 யை அடித்த ஒயர், கட்டிங்பிளேடு மற்றும் கல் சம்பவ இடத்திலிருந்தது. எதிரிகள் இருவரும் அங்கிருந்து செல்லும்போது அ.சா.1 யை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி சென்றதாக அருகிலிருந்தவர்கள் கூறினார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

அ.சா.1 இருசா எனது மனைவியின் உடன்பிறந்த தம்பி ஆவார். அவர்கள் அடித்துகொண்ட சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்று பார்க்கும்போது சம்பவத்தில் ஈடுபட்ட இருதரப்பினர்களும் இல்லை.

**மறுவிசாரணை-** இல்லை.